**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

**அசல் வழக்கு எண்.229/2018**

**2020 ஆண்டு மார்ச் மாதம் 13 ம் நாள்**

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி **செல்வி.ஆர். வைஷ்ணவி.பி.ஏ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி** அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தங்கம்மாள் | வயது | 63 |
| க.பெ. | ராகவன் | மதம் | |
| முகவரி | | தொழில் | |

**<u>நான் இந்த வழக்கில் வாதி தரப்பு 1 ம் சாட்சி (PW1) (13.03.2020)</u>**

**<u>1 மற்றும் 2 ஆம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி</u>**

எனது வயது 63 ஆகும். எனக்கு சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது. எனது மூத்த மகள் சசிகலா, இளைய மகள் தனலட்சுமி ஆவார்கள். சசிகலாவிற்கு சுமார் 50 வயது இருக்கும், இளைய மகள் தனலட்சுமியிக்கு சுமார் 49 வயது இருக்கும். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் நான் குறிப்பிட்டுள்ள வயது, முகவரி அனைத்தும் சரியா என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.2 ஆதார் அட்டையில் எனது பிறந்த தேதி 10.06.1955 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.4 ஆதார் அட்டையின் ஜெராக்ஸ்ஸி எனது மகள் தனலட்சுமியின் பிறந்த தேதி 16.05.1965 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.3 ஆதார் அட்டையின் ஜெராக்ஸ்ஸி எனது மகள் சசிகலாவின் பிறந்த தேதி 15.06.1978 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் 1955 ல் பிறந்திருந்தால் எனக்கு 1965 ஆம் ஆண்டு முதல் மகள் பிறந்திருக்க வாய்ப்பில்லை என்றால் சாட்சி மௌனமாக இருந்தார், வழக்கறிஞர் கேட்ட கேள்வியை புரிந்து கொள்ளவில்லை. வாதி தரப்பு

சான்றாவணங்கள் அனைத்தும் நான் வழக்கிற்காக உருவாக்கிய ஆவணம் என்பதால் அதனை ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று சொன்னால் சாட்சி மௌனமாக இருந்தார், வழக்கறிஞர் கேட்ட கேள்வியை புரிந்து கொள்ளவில்லை. இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வா.த.சா.ஆ.1 இறப்பு சான்றிதழில் இறந்த ராகவனின் மனைவியின் பெயர் மனோகரி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தேனி மாவட்டம், உத்தம்பாளையம் தாலுக்கா, அனுமந்தபட்டியில் பல வருடங்கலாக குடியிருந்து வருகிறேன். நான் திருப்பூரில் குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல, சில வருடங்கள் குடியிருந்தேன். நான் திருப்பூரில் எங்கு, எந்த ஆண்டு குடியிருந்தேன் என்றால் நான் 5 வருடங்களுக்கு முன்பு குடியிருந்தேன், ஆனால் எவ்வளவு வருடம் குடியிருந்தேன் என்று ஞாபகம் இல்லை. இறந்து போன ராகவனுக்கு சொத்துக்கள் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். இறந்து போன ராகவனின் சொத்துக்களை குறித்து தான் வாரிசு சான்றிதழ் கோரி இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இறந்து போன ராகவன் பெயரில் உள்ள சொத்துக்களை எப்போது யாரிடமிருந்து, எந்த ஆண்டு ராகவன் கிரையம் பெற்றார் என்ற விபரம் எனக்கு தெரியுமான என்றால் ஞாபகம் இல்லை. 1 ஆம் பிரதிவாதி தான் இறந்து போன ராகவனின் சட்டப்படியான மனைவி என்றும், 2 ஆம் பிரதிவாதி தான் சட்டப்படியான வாரிசு என்று சொன்னால் சரியல்ல, நான் தான் முதல் மனைவி, 1 ஆம் பிரதிவாதி இரண்டாவது மனைவியாவார். இறந்து போன ராகவனுக்கும் எனக்கும் திருமணம் நடைபெறவில்லை என்றும், 2, 3 ஆம் வாதிகள் அவரது வாரிசுகள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இறந்து போன ராகவனின் பெயரில் சொத்துக்கள் உள்ளதாலும், நான் தாக்கல் செய்த ஆவணங்களை பொய்யாக உருவாக்கி, பிறரின் தூண்டுதலாளும், இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 1, 2 ஆம் பிரதிவாதிகள் தான் இறந்து போன ராகவனின்

சட்டப்படியான வாரிசுகள் என்றும், நாங்கள் சட்டப்படியான வாரிசுகள் அல்ல என்பதால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. (வழக்குகறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க 3 மற்றும் 4 ஆம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.)